**மாவனல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 பெப்ரவரி 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாவனல்ல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 144,122 கிரயமான கிணறொன்று நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானம் பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டில் ரூபா 150,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்று கணக்கீடு செய்யப்படாமையினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கான வருமான பங்களிப்புக் கணக்கு என்பன அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் நிறைவேற்றப்பட்ட இரண்டு வேலைகள் மற்றும் பொது நிதியத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்கான கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடுகள் முறையே முறையே ரூபா 22,279 தொகை மற்றும் ரூபா 406,489 தொகை குறைத்து ஒதுக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் கடன் கணக்கின் மீதி ரூபா 11,787,120 ஆக இருந்ததுடன் பட்டோலைகள் / அறிக்கைகளின் பிரகாரம் மீதி ரூபா 11,768,016 ஆனமையால் ரூபா 19,104 வேபறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்ன் இறுதியில் 01 வருடாந்த விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 47,726,000 ஆகும்.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருடாந்த விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 17,721,407 ஆகும்.

## 1.4 இனங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2000 இன் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்கள் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் | 20,000 | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய கைத்தொழில்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க வேண்டியிருந்த போதிலும், 05 வியாபார நிறுவனங்களினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| | (i) நிதிப்பிரமாணம் 371(இ) | 476,954 | செயல்நிமித்த உபகட்டு நிதியைப் பெற்ற நபர்களினால் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக கையிலுள்ள மிகுதிப் பணம் அத்தினம் அல்லது அடுத்துவரும் வேலைநாளில் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 571 | 583,556 | 1999 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(iii) நிதிப்பிரமாணம் 1646 - சபைக்குச் சொந்தமான 24 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை 2013 ஆம் ஆண்டு முதல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,963,860 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,446,236 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 15,304,000 | 11,760,000 | 7,862,000 | 10,057,000 | 14,520,055 | 13,670,137 | 6,695,002 | 12,244,384 |
| வாடகை | 27,859,400 | 26,997,000 | 23,120,000 | 6,511,000 | 22,027,400 | 20,333,993 | 18,159,446 | 1,779,899 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,675,200 | 2,350,000 | 2,350,000 | - | 1,825,200 | 7,110,568 | 1,450,000 | 111,650 |
| ஏனைய வருமானம் | 42,672,000 | 68,079,000 | 31,917,000 | 74,495,000 | 40,979,000 | 32,913,422 | 1,225,371 | 102,625,904 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது வீதவரியும் வரியும், வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமானம் போன்ற வருமான விடயங்களில் முறையே 48 சதவீதம், 17 சதவீதம், 12 சதவீதம் மற்றும் 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

#### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி மீதி ரூபா 9,872,820 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கு மேற்பட்ட மீதி ரூபா 6,159,000

ஆகும். ஆதன வரி மற்றும் ஏக்கர் வரியை அறவிடுவதற்காக சபையின் செயற்படு நிலை மந்தமாகக் காணப்பட்டது.

(ஆ) 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமையின் காரணமாக அபிவிருத்திப் பணிகளின் அடிப்படையில் வருடாந்தப் பெறுமதி அதிகரிக்கின்ற ஆதனங்கள் இனங்கண்டு கணிசமான அளவு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்குக் காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(இ) தரகு செலுத்தும் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 03 ஊழியர்களினாலும், 06 வருமான உத்தியோகத்தர்களினாலும் நிலுவை ஆதனவரி அறவிடப்பட்டிருந்த போதிலும், 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு வரி அறவிடும் சதவீதம் மாதாந்தம் 20 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக 14 கடைகளிலிருந்து நிலுவை வாடகையாக அறவிட வேண்டிய ரூபா 557,637 கூட்டுத்தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2017 ஆம் ஆண்டிற்காக அனுமதிப்பத்திரம் பெறாத 02 வியாபார நிறுவனங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிட வேண்டியிருந்ததுடன் கொடுப்பனவுகளைப் புறக்கணித்தவர்களுக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 09 ஆந் திகதிய 1736 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள நிரந்தர மற்றும் தற்காலிக அறிவித்தல் பதாதைகளின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், 20 அறிவித்தல் பதாதைகளுக்கான கட்டணம் ரூபா 966,400 இனை அறவிடுவதற்கும், அனுமதியற்ற அறிவித்தல் பதாதைகளுக்காக சட்டரீதியான படிமுறைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 இறைச்சிக் கடைகளும், ஒரு மீன் கடையும் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடகை செலுத்தாமையின் அடிப்படையில் வருடாந்தம் ரூபா 1,787,420 தொகையான வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

(இ) 2002, 2003, 2005 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளின் நிலுவை வாடகையான ரூபா 1,080,539 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதா செயலாளர்களிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,093,125 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 26,191,148 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) அமுல்படுத்தப்படாத இலக்குகள்**

பொது நிதியத்தின் கீழ் 19 வேலைகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 14,838,595 தொகையான மதிப்பீடு தயாரித்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதும் 2018 மே 22 ஆந் திகதி வரையிலும் அங்கீகாரம் கிடைக்காமையினால் அவற்றை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

றன்திவல ஹீன்னவத்த கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போன்ற உக்காத கழிவுப் பொருட்கள், கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு அருகில் முறையற்ற வகையில் போடப்பட்டிருந்தது.

**(இ) சுற்றாடல் பிரச்சினை**

மாவனல்ல சிறுவர் பூங்கா அருகில் பொது மலசலகூடங்களில் இருந்து கசிந்து சென்றதுடன் மலசலகூடத்தைச் சுற்றியுள்ள சூழல் அசுத்தமாகக் காணப்பட்டது.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 மே வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

(அ) பிரதேச சபையில் தீயணைப்புப் பிரிவின் சேவைப் பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாவனல்ல பேருந்து நிலையத்தில் பொது மலசலகூடத்தில் கழிவுப் பொருட்களுடன் நீர் வெளியே கசிந்தமையால் 2014 ஆம் ஆண்டு முதல் மலசலகூடம் மூடப்பட்டமையினால் பொதுமக்களுக்கு சேவையினை வழங்குவதற்கு இதன் மூலம் முடியாதிருந்தது.

(இ) மாவனல்ல சிறுவர் பூ ங்காவிற்குரிய பொது மலசலகூடத்தின் நீர்க்கட்டணப் பட்டியல் வாடகையாளரிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் அறவிடப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 256,068 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி 04 பதவி வகைகளுக்காக 06 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 15 பதவிகளில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக அமைய அடிப்படையில் 46 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2005 ஆம் ஆண்டிற்கும் 2014 ஆம் ஆண்டிற்கும் இடையிலான காலப்பகுதியில் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த மற்றும் காணாமல் போன 04 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 69,784 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 1,926,900 பெறுமதியான சபைக்குரிய இரண்டு லொறி வண்டிகள் 02 வருடம் முதல் 10 வருடம் வரை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 35 வாகனங்களுக்காக 18 சாரதிகள் மாத்திரம் சேவையாற்றுகின்றமையால் வாகனங்கள் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்ட 56 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமாக ரூபா 43,764,540 தொகையான நிதிஏற்பாடு 100 சதவீதமும், 06 செலவின விடயங்களின் கூட்டுமொத்தமான ரூபா 12,675,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் 85 சதவீதம் முதல் 99 சதவீதத்திற்கிடையிலான அளவில் கூட்டுமொத்தமாக ரூபா 56,439,540 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 17 வருமான விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 11,650,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 4,840,363 ஆக இருந்தது. பாதீடு செய்யப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடும் போது அந்த வருமானத் தலைப்புக்களின் வருமானங்களை அறவிடுதல் 06 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவடைந்திருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | முற்பணப் பதிவேடு சரியான பிரகாரம் நாளதுவரையாக்கப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) | ஆதன வரிக்காக ஆதனங்களின் மதிப்பீடு சரியான பிரகாரம் இடம்பெறாமை. |
| | (ii) | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய சேமிப்புக்கள் காணப்பட்டமை |
| | (ii) | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | (i) | நாளாந்த ஓட்ட அட்டவணை சமர்ப்பிக்கப்படாமை |
| | (ii) | வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படாமை |
| (உ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | முறையாக கழிவுகள் அகற்றப்படாமை. |